தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1978 மார்ச் 31

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

வரதமாநதி அணைக்கட்டுப் பணிகள்

* 732 வினா—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) பழனி வட்டத்தில் கட்டப்பட்டு வரும் வரதமாநதி அணைக்கட்டு வேலைகள் சமீபப் பெருமழையின் காரணமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது சம்பந்தமாக மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். பழனிவேல் ; தலைவரவர்களே, பழனி வட்டத்தில் கட்டப்பட்டு வரும் வரதமாநதி அணைக்கட்டு வேலைகள் சமீப பெருமழையின் போது நிறுத்தி வைக்கப்பட்டதாகவும். அதனால் அப்பகுதி விவசாயிகளுக்குப் பாசனத்திற்குத் தண்ணீர் வருவதில் தடை ஏற்பட்டு பெரும் சிரமப் பட்டதாகவும் சொல்கிறார்கள். அது உண்மையா என்பதை அறிவதோடு, அந்த அணைக்கட்டிலிருந்து எத்தனை ஏக்கர்களுக்குப் பாசன வசதி கிடைக்கிறது ? புதிதாகப்பாசன வசதி கிடைக்கும்ஏற்பாடுஏதேனும் அரசின் குறிப்பில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[1978 மார்ச் 31

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 1977-ஆம் ஆண்டுத் திட்டமிட்டபடியே மண் அணை கட்டி முடிக்கப்பட்டது. கல் அணையைப் பொறுத்தவரையில் திட்டமிட்டபடி நவம்பர் 77-இல் கட்டியிருக்க வேண்டும். 'That is the masonry dam' ஆனால் சற்றுத் தாமதம் ஏற்பட்டு விட்டது. 31—1— 78-இல் 99 சதவீதம் வேலை முடிக்கப்பட்டு விட்டது. இத் திட்டத்தில் முன்னேற்றம் திட்டமிட்டபடியே நடந்து கொண்டிருக்கிறது. வேலை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறினார்கள். அது சாதாரணமாக மழை நாட்களில் நடக்காமல் இருந்திருக்கலாம், அதைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். அந்தத்திட்டத்தின் மூலம் எவ்வளவு நிலம் பாசனம் பெறும் என்ற விவரம் இங்கே இல்லை.

குமரி மாவட்டத்தில் நீர்ப்பாசனக் கால்வாய்கள்

திரு. மி. வின்சென்ட்

* 733 வினா—திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) குமரி மாவட்டத்தின் நீர்ப்பாசன கால்வாய்கள் எத்தனை ஆண்டுகளுக்கு முன்னால் அமைக்கப்பட்டன ?

(ஆ) அவைகளை நவீனப்படுத்துவதற்கு அரசு என்ன என்ன முயற்சிகள் எடுத்துள்ளது ?

(இ) அனந்தனாறு கால்வாயை நவீனப்படுத்த இந்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) பழைய நீர்ப்பாசன கால்வாய்கள் நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்டவை.

(ஆ) இது தல அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. படிப்படியாக மாநிலத்திலுள்ள பழைய நீர்ப்பாசன அமைப்புகள் நவீனப்படுத்துவது அரசின் நோக்கமாகும்.

(இ) இதற்கென திட்டம் தற்போது ஆய்வில் உள்ளது.